ஸ்ரீ தேனுபுரீஸ்வரர் (ஸ்ரீ துர்க்கை அம்மன் ஸன்னதி பிரசித்தி பெற்றது) ஆலயமும், உடையாளூருக்கு வடக்கில் உள்ள முடிகொண்டான் ஆற்றின் வடக்கு கரையில் (பழையறை கிராமத்திற்கு கிழக்கே) 108 திவ்யதேசங்களில் ஒன்றான **நந்திபுரவிண்ணகரம்** என்றும் **ஸ்ரீ நாதன்கோவில்** என்றும் அழைக்கப்படும் 21–வது திவ்யதேசம் அமைந்திருப்பது ரொம்பவும் விஷேசமானது. **ஸ்ரீஜகந்நாதப்பெருமாள் தாயாருடன்** அமர்ந்த கோலத்தில் மேற்கு புறம் பார்த்த திருமுக மண்டலத்துடன் அருள்பாலித்து வருகிறார். பெருமாளுக்கு அருகில் மூலவர் ஸன்னதியில் **நந்திகேஸ்வரர்** வீற்றிருப்பது விசேஷமானதாகும். ஊருக்கு நேராக வடக்கே 5 கிலோமீட்டர் தூரத்தில் பாஸ்கரக்ஷேத்ரம் என்றும் கும்பேஸ்வரம் என்றும் அழைக்கப்படும் கோவில்கள் நிறைந்த **மஹாமகம்** புகழ் **கும்பகோணம்** நகரம் அமைந்துள்ளதும் பெருமைப்பட வேண்டிய விஷயமாகும்.

## ஸ்ரீராதாகல்யாண வஸந்தோத்ஸவம்

அந்தக் காலத்தில் 1900 களில் உள்ளூரில் வசித்து வந்த பாகவதர்களான மேலத்தெரு **ஸ்ரீமஹாலிங்க (அய்யர்) பாகவதர், ஸ்ரீஅய்யாசாமி பாகவதர், சாமிஅய்யர் என்கிற ஸ்ரீசுவாமிநாத பாகவதர்** மற்றும் ஒத்தைத் தெரு **ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி (அய்யர்) பாகவதர்** முதலான பாகவதோத்தமர்களால் பெருமாள் கோவிலில் ஏகாதசி பஜனை, டோலோத்ஸவம் முதலியன ப்ராசீன ஸம்ப்ரதாய பஜனை முறைப்படி தொடர்ந்து நடைபெற்று வந்தன. அதன்பிறகு **ஸ்ரீமத்பாகவத திலகம்** என்று அழைக்கப்படும் **திருவிடைமருதூர் ஸ்ரீதுரைஸ்வாமி பாகவதர்** அவர்கள் குடும்பத்துடன் உடையாளூர் வந்து வசித்து வந்த சமயம் அக்ரஹாரம் கீழத் தெருவில் உள்ள தனது க்ருஹத்தில் 1930களில் தொடங்கி வருஷாவருஷம் நடத்திக்கொண்டு வந்த **ஸ்ரீராதாகல்யாண வஸந்தோத்ஸவம்** சில ஆண்டுகளுக்கு பிறகு அக்ரஹாரம் மேலத்தெருவில் வசித்து வந்த **செம்மங்குடி ஸ்ரீ சுப்ரமண்ய அய்யர்** மற்றும் அவர்களின் புதல்வர்களான **Prof. ஸ்ரீ S. கிருஷ்ணமூர்த்தி அய்யர் & ஸ்ரீ S. நாராயணஸ்வாமி அய்யர்** ஆகியோரது பெருமுயற்சியால் கும்பகோணம் **ஸ்ரீ E.K. கிருஷ்ணமூர்த்தி பாகவதர்**, உடையாளூர் **ஸ்ரீ D. மஹாலிங்க (அய்யர்) பாகவதர், ஸ்ரீ D. ராஜகோபால (அய்யர்) பாகவதர்** தவிர ஸ்ரீ E.K. கிருஷ்ணமூர்த்தி பாகவதரின் புதல்வர்களான **ஸ்ரீ E.K. ஸ்ரீனிவாஸ பாகவதர், ஸ்ரீ E.K. ஜயராம பாகவதர்** மற்றும் உள்ளூர் பாகவத சிரோன் மணிகளான **ஸ்ரீ M. ராமஸ்வாமி பாகவதர், ஸ்ரீ A. வெங்கட்ராம பாகவதர், ஸ்ரீ V. அனந்தநாராயண (அய்யர்) பாகவதர், ஸ்ரீ S. ஸுப்ரமண்ய (அய்யர்) பாகவதர்** ஆகியோரின் ஒத்துழைப்புடன் ஸ்ரீராதாகல்யாண வஸந்தோத்ஸவம் தொடர்ந்து வருஷா வருஷம் வெகுவிமர்சையாக நடந்து வந்தது. **உடையாளூர் டாக்டர் ஸ்ரீ K. கல்யாணராம பாகவதருடன்** இணைந்து உள்ளூர்வாசிகள், மண்டகப்படிதாரர்கள், உள்ளூர் மற்றும் வெளியூர் பாகவதர்கள் மற்றும் உடையாளூர் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பஜன் மண்டலியினர் அனைவரும் இணைந்து ப்ரதிவருஷம் தை மாதம், முதல் அல்லது இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை அன்று ஸ்ரீலக்ஷ்மீ நாராயணப் பெருமாள்கோவிலில் மிகுந்த சிரத்தையுடன் **ஸ்ரீராதாகல்யாண வஸந்தோத்ஸவத்தை** மஹோன்னதமான முறையில் தொடர்ந்து நடத்திக் கொண்டு வருகிறார்கள். சென்னையில் வசிக்கும் உடையாளூர்வாசிகளும் அவரது உறவினர் நண்பர்களுடன் விஷேச பஸ்கள் மூலம் இந்த வைபவத்தில் கலந்து கொண்டு செல்வதற்கு **ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பஜன் மண்டலி**யினர் சிறப்பான ஏற்பாடுகளையும் செய்து வருகிறார்கள்.

## பார்புகழும் உடையாளூர்

சென்ற நூற்றாண்டில் ஹரிகதா காலக்ஷேபம், உபந்யாஸம், ப்ரவசனம் செய்து வந்த **உடையாளூர் ப்ரஹ்மஸ்ரீ ராஜகோபால சர்மா, பாலவால்மீகி ப்ரஹ்மஸ்ரீ ராமமூர்த்தி சர்மா** ஆகியோரால் உடையாளூரின் பெயர் பாரதநாடு முழுவதும் புகழ்பெற்று விளங்கி வந்தது. தற்போது 2016–ஆம் ஆண்டு மஹாமகம் மஹோத்ஸவம் சமயம் உடையாளூர் ஸ்ரீ K. கல்யாணராம பாகவதர் அவர்களுக்கு **கும்பகோணம் சாஸ்த்ரா பல்கலைக்கழகம் "டாக்டர்" பட்டம்** வழங்கி சிறப்பித்ததுடன் **நாமஸங்கீர்த்தன பஜனை**க்கும் முதன் முதலாக மிகப்பெரிய அங்கீகாரம் கிடைத்தது மிகவும் போற்றுதலுக்குரியதாகும். பஜனை ஸம்ப்ரதாயத்தை செவ்வனே கற்றுத் தேர்ந்து தனக்கே உரித்தான அற்புதமான குரல் வளத்துடன் அனைத்து நாடுகளிலும் ஆயிரக்கணக்கான ரசிகர்களையும் ஏற்படுத்திக்கொண்டு ஸம்ப்ரதாயத்தில் கொஞ்சமும் வழுவாமல் புகழ்பெற்று விளங்கும் **பரமபாகவதரத்னம் உடையாளூர் டாக்டர் ஸ்ரீ K. கல்யாணராம பாகவதர்** அவர்கள் "பாகவத ஸேவா ட்ரஸ்ட்" என்று ஏற்படுத்தி மாதாமாதம் ஒரு கணிசமான தொகை அனைத்து பாகவதோத்தமர்களுக்கும் தவறாமல் கிடைக்கும்படி ஏற்பாடு செய்திருப்பது பாரதத்திருநாட்டிலேயே இதுவரை யாரும் செய்யாத ஒரு **மிகப்பெரியசேவை**யாகும்.

## பாலர் பஜனைக் கோஷ்டியினரின் மார்கழி மாத வீதி பஜனை

ஸ்ரீமத் பாகவததிலகம் திருவுடைமருதூர் **ஸ்ரீதுரைசாமி பாகவதர்** அவர்களின் புதல்வரான **ஸ்ரீ D. ராஜகோபால அய்யர்** அவர்கள் 1970களில் பள்ளி, கல்லூரிகளில் படித்துக் கொண்டிருந்த தனது புதல்வர்களையும் அக்ரஹாரத்தில் உள்ள மற்ற சிறுவர்களையும் சேர்த்துக் கொண்டு மார்கழி மாதம் முழுவதும் கிராமத்தின் வீதிகளில் அதிகாலையில் **வீதிபஜனை** செய்து வருமாறு ஏற்பாடு செய்தார். சிவன் கோவில், பெருமாள்கோவில்களில் தினசரி மார்கழி மாத **திருப்பக்ஷி** பூஜை அபிஷேகங்கள் நடக்கவும் ஏற்பாடு செய்ததுடன் பஜனை செய்து கொண்டுவரும் சிறுவர்களுக்கு பிரசாதம் வழங்கவும் ஏற்பாடு செய்து உற்சாகப்படுத்தினார்.